

பம்மல் வடக்கு பகுதி, அனகாபுத்தூர் 3வது வட்டம், அ.தி.மு.க.வைச் சேர்ந்த ரமேஷ் தலைமையில் 20 அ.தி.மு.க.வினர் அக்கட்சியில் இருந்து விலகி மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.. உடன் பகுதி செயலாளர் த.ஜெயகுமார், வட்டச் செயலாளர்கள் ப.அன்பழகன், க.மோகன், பொருளாளர் ச.பிரபு, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஞா.பிரபு மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்

### மேலக்கோட்டையூரில் – விளையாட்டு உபகரணங்கள் வழங்க வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு வழியெங்கும் கழகத்தினர் திரண்டு உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்-அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், நவ.18-

மேலக்கோட்டையூரில் உள்ள விளையாட்டு அகாடெமி அரங்கில், விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்க நாளை 19ஆம் தேதி காலை 9.30 மணியளவில் வருகை தரும் மாண்புமிகு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வண்டலூர் மாம்பாக்கம் வி.ஐ.டி பல்கலைக் கழகம் மற்றும் மேலக் கோட்டையூர் ஆகிய 3 இடங்களில் கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், மேலக்கோட்டையூரில் அமைந்துள்ள விளையாட்டு அகாடெமி அரங்கில்,



நாளை 19ஆம் தேதி காலை 10.00 மணி அளவில் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா நடைபெறவுள்ளது.

துணை முதல் அமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு விளையாட்டு வீரர்களுக்கு, விளையாட்டு உரகரணங்களை வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்.

இவ்விழாவில் பங்கேற்க வருகை தரும் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வண்டலூர் மாம்பாக்கம் வி.ஐ.டி பல்கலைக்கழகம் மற்றும் மேலக்கோட்டையூர் ஆகிய 3 இடங்களில் கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர்.

நாளை 19ஆம் தேதி காலை 9.00 மணி அளிவில் வண்டலூரில் மாவட்ட திமுக சார்பில் நடைபெறும் வரவேற்பில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அலைகடலென திரண்டு வந்து தமது கரங்களில் கழகத்தின் இலட்சிய இருவண்ணக் கொடியேந்தி மகிழ்ச்சியுடன் பெரும் கூட்டமாக திரண்டு நின்று வரவேற்பு அளிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாம்பாக்கம் வி.ஐ.டி பல்கலைக்கழகம் அருகில் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய திருப்போரூர் வடக்கு தெற்கு ஒன்றியம், திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம், திருப்போரூர் திருக்கழுக்குன்றம் பேரூர், மாமல்லபுரம் நகரம் ஆகிய பகுதிகளில் இருந்து கழகத்தினர் தங்களது கரங்களில் கழகத்தின் கொடியேந்தி வரவேற்பு அளிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலக்கோட்டையூரில் உள்ள கழகத்தினர் அனைவரும் மேலக்கோட்டையூரில் திரண்டு நின்று மிகவும் எழுச்சியான முறையில் வரவேற்பு அளிக்க உள்ளனர்.

சரித்திர சாதனை படைத்து வரும் நம்முடைய இளைய தலைவர் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது, "நமது கடமை", "நமது உரிமை" என்ற அந்த உணர்வோடு மாவட்டம் முழுவதிலிருந்து கழகத்தினர் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

### திரு.வி.க.நகர் மண்டலத்தில் மாநகராட்சியின் சார்பில்

# ரூ 14.50 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு மேற்கொண்டார்!





சென்னை,நவ.18-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கொளத்தூர் மற்றும் திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட திரு.வி.க.நகர் மண்டலத்தில் மாநகராட்சியின் சார்பில் ரூ 14.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை நேற்ற (17.11.2025) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் , திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு67, பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலை அருகில் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூ.9.68 கோடி மதிப்பில் 17,071 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்களுடன் புதிதாக கட்டப்பட்டு வரும் வார்டு அலுவலகக் கட்டடப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்தக் கட்டடமானது செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர், மாமன்ற உறுப்பினர், உதவி வருவாய் அலுவலர், சுகாதார ஆய்வாளர், சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோருக்கு தனித் தனி அறைகள், இசேவை மையம், கலந்தாய்வுக் கூடம், நூலகம் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் பேப்பர் மில்ஸ் சாலை அருகில் மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ், ரூ.4.82 கோடி மதிப்பில் 13,805 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்களுடன் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்தக் கட்டடமானது, காத்திருப்பு அறை, புறநோயாளிகள் பிரிவு, மருத்துவ அலுவலர் அறை, யுனானி மருத்துவ அறை, பல்மருத்துவ அறை, இரத்த சேகரிப்பு அறை, ஆய்வகம், அவசரப் பிரிவு அறை, என்.சி.டி. ஸ்கிரீனிங் அறை, தடுப்பூசி செலுத்தும் அறை, பாலூட்டும் தாய்மார்கள் அறை, மருந்தகம், எம்.ஆர்.டி. அறை, தேசிய காசநோய் ஒழிப்பு திட்ட அறை, மருந்துகள் பாதுகாப்பு அறை, அலுவலர் மற்றும் பணியாளர் அறை, மின் தூக்கி உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

இந்த ஆய்வுகளின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.





தி.மு.க. சட்டத் துறையின் சார்பில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், சட்டமன்ற ஒருங்கிணைப்பாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள், ஆலோசனைக் கூட்டம் கலைஞர் அரங்கத்தில் 16–11–2025 அன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு கழக சட்ட துறை செயலாளர் அனைவருக்கும் SIR எதிர்கொள்வது குறித்து விளக்க உரை ஆற்றினார். இதில் சட்ட துறை இணை செயலாளர்கள் துணை செயலாளர்கள் தலைமைக்கழக வழக்கறிஞர்கள் மற்றும் 1000 கும் மேற்பட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# 'முனைவர்' ஆன அமைச்சர் அன்பில் மகேஸ்!












சென்னை,நவ.18-

தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியின் உடற்கல்வியியல் துறையில் 2021ஆம் ஆண்டு முதல் "உடற்கல்வி இயந்திரக் கற்றல் வழியாகப் பள்ளி மாணவர்களுக்கு திறன்மிகு கற்றல் (Physical Activity for Skill Development Through Machine Learning)" என்ற தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டு வந்தார்.

இதன் ஒரு பகுதியாக நவம்பர் 17ஆம் தேதி மாலை 4.30 மணியளவில் திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியின் உள்விளையாட்டு அரங்கில் அவருக்கு முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு (VIVA -VOCE Examination) நடைபெற்றது.

இறுதியில் External Examiner Dr.S.Thirumalai Kumar (Tamilnadu physical education and Sports University) முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி" என அறிவித்தார்.

திருச்சி தேசியக் கல்லூரியின் துணை முதல்வர் மற்றும் உடற்கல்வியியல் துறை இயக்குநர் முனைவர் து.பிரசன்ன பாலாஜி வழிகாட்டுதலின் கீழ் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

உடற்கல்வி செயல்பாடுகள் பள்ளிக் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகின்றன? கணினிசார் நுண்ணறிவுத் தொழில்நுட்பம் கற்றலுக்கு எவ்வாறு உதவுகிறது? என்பதை இந்த ஆய்வு பகுப்பாய்வு செய்தது. மேலும் உடற்கல்வி செயல்பாடுகள் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியில் ஏற்படுத்தும் தாக்கத்தை இயந்திரக் கற்றல் (Machine Learning) தொழில்நுட்பத்தின் மூலம் ஆராயும் வகையிலும் அமைந்தது.

### துணை முதல்வர் பிறந்த நாள் விழாவை

# திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் – வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் வேண்டுகோள்!

திருவள்ளூர் நவ 18;

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் தண்டலத்தில் நடைபெற்றது இதில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமை வகித்தார். ஒன்றிய கழகச் செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி அனைவரும் வரவேற்றார்

தொகுதி பார்வையாளர் கவி.கணேசன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் சி.எச்.சேகர், மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல். ரவி, மாநில நிர்வாகிகள் வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ் பொதுகுழு உறுப்பினர்கள் பி.வெங்கடாசலபதி, ஏ.வி. ராமமூர்த்தி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் முன்னிலை வகித்தார்கள் இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினார்.

அப்போது அவர் பேசியது-



தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகள் நடந்து கொண்டிருப்பதை மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகச் செயலாளர்கள் இணைந்து வாக்கு திருட்டு நடைபெறாமல் கண்காணிக்க வேண்டியது அவசியமானது என்பதை கருத்தில் கொண்டு,

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய , நகர , பகுதி, பேரூர்களில் வாக்குச்சாவடிகளில் அடங்கிய நம்முடைய செயல் வீரர்கள் அனைவரும், பூத் அளவில் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் கழக வழக்கறிஞர்கள் வாக்காளர்களுக்கு வாக்காளர் திருத்தம் வழிமுறைகள் மேற்கொள்ள வேண்டும்

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கழகக் கொடிகளை ஏற்றி தோரணைகளை அமைத்து ஏழை எளிய பொதுமக்கள் பயன்படும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் பள்ளி மாணவ மாணவிகளுக்கு பள்ளி உபகரண பொருட்கள் முதியோர் இல்லம் கருணை இல்லத்திற்கு அன்னதானம் வழங்கி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை கொண்டாட வேண்டும்.

ஒவ்வொரு ஒன்றிய நகர பேருர்களில் இளைஞர் எழுச்சி நாள் மாபெரும் பொதுக்கூட்டங்களை நடத்திட வேண்டும்

மற்றும் 11.11.2025 அன்று திருவள்ளூரில் SIR கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட திரு வள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் நன்றி என தெரிவித்தார்.

ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் டி. கே.சந்திரசேகர், கி.வே. ஆனந்தகுமார், மு.மணிபாலன், ஆ.சத்தியவேல், ஜான்பொன்னுசாமி, ந.பரிமளம், நா.செல்வசேகரன், மு.முரளிதரன், ஆ.ராஜா, வே.ஆனந்த்குமார், ஏ.ஆர். டி.உதயசூரியன், கா.சு. ஜெகதீசன், ஜி.ரவிக்குமார், இரா.அறிவழகன், அபிராமிகுமரவேல், பி.முத்து, க.சு. தமிழஉதயன் நிர்வாகிகள் வெற்றி(எ)ராஜேஷ், க.சம்பத், வி.பி, ரவிக்குமார், ஜி.பி.வெங்கடேசன், ஆறுமுகம், வில்சன், கோபி, ரமேஷ், முகமது அலவி, ரோஸ் பொன்னையா, ஜெயலலிதா சசிதரன், டி. சங்கர், கதிரவன், யுவராஜ், வழக்கறிஞர் ஆ.சீனிவாசன், இரா.அப்புன், வெங்கடேசன், ரவி, ப.து.தமிழரசன், டி.கே.முனிவேல், ஏ.ஜோதி, மா.தீபன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.





திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தண்டலத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை கொண்டாடுவது குறித்து பல்வேறு ஆலோசனை வழங்கினார். உடன் மு.பகலவன், எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி, கவி. கணேசன், சி.எச்.சேகர், மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் உள்பட பலர் உள்ளனர்.